செ.வெ.எண்:36 நாள்:20.10.2021

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் "இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தின் மூலம் 1739 அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள 1,69,009 மாணவ, மாணவியர்கள் பயனடைய உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (20.10.2021) பள்ளிக்கல்வித்துறை சார்பில் இல்லம் தேடிக் கல்வி கலைப்பணயம் விழிப்புணர்வு பிரச்சார வாகனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

கொரோனா பெருந்தொற்றுப் பொது முடக்க காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி / இழப்புகளைக் குறைத்திடும் வைகியல் **"இல்லம் தேடிக் கல்வி"** என்கிற திட்டத்ததை மாநிலம் முழுவதும் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டள்ளது. **"இல்லம் தேடிக் கல்வி"** திட்டமானது, மாநில அரசின் 100 சதவீத நிதிப் பங்களிப்பின் கீழ், ரூ.200 கோடி மதிப்பீட்டில் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

**திட்டத்தின் தொலைநோக்கம்:**

கொரோனா பெருந்தொற்று பரவல் சார்ந்த பொது முடக்க காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி / இழப்புகளைக் சரிசெய்தல்.

**திட்டக்குறிக்கோள்:**

அ. பள்ளி நேரங்களைத் தவிர, பள்ளி வளாகங்களுக்கு வெளியே, மாணவர்கள் வசிப்பிடம் அருகே சிறிய குழுக்கள் அடிப்படையில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் தன்னார்வலர்களின் பங்கேற்புடன் மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை வழங்குதல்.

ஆ. மாணவர்கள், பள்ளிச் சூழலின் கீழ் ஏற்கனவே பெற்றுள்ள கற்றல் திறன்களை **"இல்லம் தேடிக் கல்வி"** திட்டச் செயல்பாடுகளின் வாயிலாக மீண்டும் வலுப்படுத்துதல்.

இ. இத்திட்டம் 6 மாத காலத்திற்கு, தினசரி குறைந்தபட்சம் 1 முதல் 1 ½ மணி நேரம் (மாலை 5 மணி முதல் 7 மணி வரை) மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை வழங்கி அவர்களை அன்றாட கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் படிப்படியாக பங்கேற்கச் செய்தல்.

**திட்டச் செயல்பாட்டு வழிமுறைகள்:**

கொரோனா பெருந்தொற்றுப் பொது முடக்க காலங்களில் பள்ளிகள் செயல்படாததால் மாணவர்களிடையே கடுமையான கற்றல் இழப்பை ஏற்படுத்தியது இந்த கிராமப்புற குடியிருப்பு

அடிப்படையிலான வெளியீட்டு திட்டமானது, குழந்தைகளிடையே கற்றல் இழப்புகளை குறைக்க உதவும். இது ஒரு தன்னார்வ அடிப்படையிலான திட்டம் என்பதால், இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த சமூகத்தில் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

கிராம அளவில் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி சமுதாய ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். **"இல்லம் தேடிக் கல்வி"** திட்டத்தின் செய்தியை "தெரு நாடகங்கள், பொம்மலாட்டம், நடனம் மற்றும் பாடல்கள் போன்றவற்றின் மூலம் உள்ளூர் நாட்டுப்புற கலைஞர்களின் உதவியுடன் பல்வேறு தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் கல்விசார் மேற்கொண்டு கிரமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதுக்குரல் கலைக்குழு, லட்சுமி நரசிம்மன் சுவாமி கலைக்குழு, கலைநிலா கலைக்குழு ஆகிய கலைக்குழுக்கள் மூலம் இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும் போது, தன்னனர்வத் தொண்டு உணர்வை கொண்டு குழந்தையின் கற்றல் இழப்பை பூர்த்தி செய்யும் அதே வேளையில் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மாணவர்களின் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் விதிகள் மற்றும் பள்ளி மேலாண்மை குழுவின் ஒரு பகுதியாக பெற்றோர்களாகிய தங்களின் கடமை மற்றும் பொறுப்பு போன்றவை சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமாகும், மேற்கூறிய அம்சங்களில் முழு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**மாவட்ட அளவிலான குழு:**

| | |
|---|---|
| **தலைவர்** | **மாவட்ட ஆட்சித் தலைவர்** |
| **உறுப்பினர் செயலர்** | **முதன்மைக் கல்வி அலுவலர்** |
| பிற உறுப்பினர்கள் | ❖ திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை<br>❖ முதல்வர், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்<br>❖ மாவட்டக் கல்வி அலுவலர்<br>❖ அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்<br>❖ பள்ளி மேலாண்மை குழு, ஊடகப்பதிவு மற்றம் ஆவணப்படுத்துல், தரம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.<br>❖ இந்நோக்கத்திற்கான பிரத்தியேகமாக நியமிக்கப்பட வேண்டும். (கல்வித் துறை மற்றும் சமூக செயல்பாடுகளில் அனுபவம் மிக்க தனி நபர் உட்பட) (பரிந்துரைக்கப்பட்ட பட்டியலை மாவட்ட அளவிலான குழு பகிர்ந்து கொள்ள வேண்டும்) |

**ஒன்றிய அளவிலான குழு:**

| | |
|---|---|
| **தலைவர்** | **வட்டார வளர்ச்சி அலுவலர்** |
| **உறுப்பினர் செயலர்** | **பணியில் மூத்த வட்டாரக் கல்வி அலுவலர்** |
| பிற உறுப்பினர்கள் | ❖ குறு வள தொகுப்பு தலைமையாசிரியர்<br>❖ வட்டார வள மைய மேற்பார்வையாளர்<br>❖ ஆசிரியர்கள் -2 (இல்லம் தேடிக் கல்வி தொடர்பான வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு செயல்பாடுகளை தனிப்பட்ட முறையில் கவனிப்பார்கள். இந்த திட்டம் நிறைவடையும் வரை இது ஒரு முழு நேர பணியாக இருக்கும்)<br>❖ (கல்வித்துறை மற்றும் சமூக செயல்பாடுகளில் அனுபவம் மிக்க தனி நபர் உட்பட) (பரிந்துரைக்கப்பட்ட பட்டியலை மாவட்ட அளவிலான குழு பகிர்ந்து கொள்ள வேண்டும்)<br>❖ பஞ்சாயத்து நிலைக் கூட்டமைப்பு (PLF) -3 உறுப்பினர்கள். |

**பள்ளி மேலாண்மைக்குழுவின் பொறுப்புகள்:**

- ❖ பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அலைபேசி செயலியை பயன்படுத்தி இல்லம் தேடிக் கல்விக்கான தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். (உள்ளூர் தொண்டர்கள், பெண் தன்னார்வலர்கள், தன்னார்வத் தொண்டுக்கான ஆர்வம் மற்றும் கல்வி போன்றவற்றில் விருப்பம் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்)
- ❖ சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தகவல், கல்விசார், தகவல் தொடர்பு செயல்பாடுகளுக்கு உதவுதல்.
- ❖ கிராமங்களுக்கு அருகில் உள்ள இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கான இடத்தை அடையாளம் காணுதல்.
- ❖ தண்ணீர், மின்சாரம், மையங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற தேவையான அனைத்து வசதிகளும் இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- ❖ குழந்தைகளுடன் தன்னார்வலர்களை இணைத்தல் மற்றும் தன்னார்வலர்கள் வருகை தராத நிலையில், மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- ❖ குழந்தைகள் மற்றும் தன்னார்வலர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- ❖ இல்லம் தேடிக் கல்விக்காக ஒரு நிகழ்ச்சி / விழாவை ஏற்பாடு செய்தல்.

- ❖ குழந்தைகளுடனான தன்னார்வப் பிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் அதுபோலவே ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கும் குழந்தைகளுடனான தன்னார்வப் பிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- ❖ பள்ளி மற்றும் சமூக அளவிலான நடவடிக்கைகளின் போது தன்னார்வலர்களை ஈடுபடுத்துதல்.
- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்டுள்ள கொரோனா தொற்று பரவலைத் தடுப்பதற்கான சமீபத்திய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.

**தலைமையாசிரியரின் பொறுப்புகள்:**

- ❖ மாணவர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி மையங்களின் சுத்தம், சுகாதாரம் மற்றும் அணுகலை உறுதி செய்தல்.
- ❖ வாரந்தோறும் இல்லம் தேடிக் கல்வி வகுப்புகளுக்கு திட்டமிட தன்னார்வலர்களை ஈடுபடுத்துதல்.
- ❖ பள்ளிகளில் இருந்து தன்னார்வலர்கள் / மையங்களுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- ❖ மையங்களின் செயல்பாடு மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வது குறித்து மாணவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்வது.
- ❖ ஒரு இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு தெரிவு செய்யப்படும் சார்ந்த தன்னார்வலர் பிற இல்லம் தேடிக் கல்வி மையத்திற்கு நியமிக்கப்படாததை குறு வள தொகுப்பு தலைமை ஆசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முன்னோட்டத் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1739 அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள 169009 மாணவ / மாணவியர்கள் பயனடைய உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சயில், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி, உதவி திட்ட அலுவலர்கள் திரு.டி.எஸ்.நாராயணன், திரு.சூசைநாதன், அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**